**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI.**
**S.C.No.171/2012**
**Prosecution Witness P.W. 14**
.....

Name : திரு. R.செல்வராஜ் Calling : பணி ஓய்வு
Father's name : திரு. இராமசாமி Religion : இந்து
Village :கம்பம் டவுன் Age : 66
Taluk : தேனி

நாள் - **13.02.2026**

(1, 6 எதிரிகள் ஆஜரில்லை, மனு தாக்கல் செய்யப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது. 2, 3, 4, 7 எதிரிகள் ஆஜர்).

முதல் விசாரணை:

நான் தற்போது கம்பத்தில் குடியிருந்து வருகிறேன். நான் பணிஓய்வு பெற்றுவிட்டேன். நான் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் நடத்துனராக பணியாற்றினேன். நான் 1985 ம் வருடம் முதல் பணி எண்.04555 என்ற எண்ணில் நடத்துனராக பணியாற்றினேன். தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் எல்லீஸ் நகரில் நகர புறநகர் பேருந்து நடத்துனராக பணியாற்றி வந்த போது, கடந்த 14.07.2010 ம் தேதி மதுரை மாவட்டத்தில் மதுரை விமான நிலையத்திற்கு தேவர் பெயரை வைக்க வேண்டுமென்று பந்த் அறிவித்து இருந்தார்கள். அன்று பந்த் என்பதால் காலையில் 5.00 மணிக்கு ட்ரிப் எடுத்தால் ஏதாவது அசம்பாவிதம் ஆகிவிடும் என்பதால் காலை 7.00 மணிக்கு மேல் வரிசை வரிசையாக அனுப்பினார்கள். நான் அன்று மதுரையில் இருந்து கம்பம் செல்லும் டிஎன் 58 என் 1244 என்ற பதிவெண் கொண்ட பேருந்தில் சென்று கொண்டிருந்தேன். எங்களுக்கு முன்னும் பின்னும் பேருந்துகள் தொடர்ச்சியாக போய் கொண்டிருந்தது. மதுரையில் இருந்து கிளம்பி வரும் போது செக்காணூரணி அருகே வடிவேல் தியேட்டர் அருகே வந்த போது, அந்த இடத்தில் பஸ்சுக்கு முன்புறமும், பின்புறமும் 4, 5 பேர்கள் கூட்டமாக வந்து கல்லை விட்டு எறிந்து, பஸ்சின் முன்பக்கம் மற்றும் பின்பக்கம் கண்ணாடிகள் உடைந்துவிட்டது, பயணிகளுக்கு காயம் எதுவும் ஏற்படவில்லை. எங்கள் அலுவலகத்தை சேர்ந்த அங்குச்சாமி என்ற அதிகாரி வண்டியை நிறுத்தாமல் உசிலம்பட்டி போங்க என்று தகவல் சொல்லி, அந்த சமயத்தில் 4,5 அரசு

பேருந்துகள் சேதம் அடைந்தது. நாங்கள் அலுவலத்தில் தெரிவித்து அங்குச்சாமி என்பவர் மூலம் செக்காணூரணி காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார்கள். சம்பவம் நடந்தது உண்மை. நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள நபர்கள் சம்பவத்தில் ஈடுபட்ட நபர்களா என்றால் எனக்கு தெரியாது. இதுசம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள். கோசமிட்டு வந்த நபர்கள் கண்ணாடிகளை உடைத்துவிட்டார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

எனக்கு காலை 5.05 மணியளவில் வேலை என்றாலும், அன்று அசம்பாவிதம் நடந்துவிடும் என்பதால் என்னை அமர வைத்து தாமதமாக தான் அனுப்பினார்கள் என்றால் சரிதான். காலை 7.00 மணியளவில் தான் பஸ்டிப்போவில் இருந்து கிளம்பினோம். எங்களுக்கு முன்பு தான் ஜீப்பில் அ.சா.1 அங்குச்சாமி என்பவர் சென்றால் என்றால் சரிதான். அரசரடியில் உள்ள பஸ்டிப்போவில் இருந்து ஆரப்பாளையம் வந்து பயணிகளை ஏற்றுக் கொண்டு தான் கம்பம் நோக்கி சென்றோம் என்றால் சரிதான். சுமார் ஒரு மணி நேரம் ஆரப்பாளையத்தில் பேருந்தை நிறுத்தி பயணிகளை ஏற்றிவிட்டு கிளம்பினோம். ஆரப்பாளையத்தில் இருந்து சுமார் 8.30 மணியளவில் கிளம்பி பின்பு எனக்கு பின்னால் சுமார் 2 பேருந்துகளோடு சென்றோம். அ.சா.1 எங்களோடு வரவில்லை. அவர் எங்களுக்கு முன்பாகவே அவரது வாகனத்தில் சென்றுவிட்டார். செக்காணூரணி காவல்நிலையத்தில் முன்பு சுமார் 1000 மீட்டருக்கு முன்னால் இருந்த வடிவேல் தியேட்டருக்கு முன்னால் சம்பவம் நடந்தது. காவல்நிலையம் எதிரே தேவர் சிலை இருந்தது. தேவர் சிலை அருகேயும் ஆங்காங்கே காவல்துறையினர் இருந்தார்கள் என்றால் எனக்கு சரியாக ஞாபகமில்லை. சம்பவம் நடந்ததாக சொன்ன இடத்தில் எங்களுடைய பேருந்து மட்டும் தான் இருந்தது, பின்னால் எத்தனை பேருந்துகள் இருந்தது என்று எனக்கு தெரியாது. எங்களது பேருந்து தான் முதலாவதாக இருந்ததால் பஸ்சின் முன்புறமும், பின்புறமும், பக்கவாட்டில் யார் வந்தார்கள் என்று எனக்கு தெரியும் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் ஆண்களும், பெண்களும் பஸ்மறியலில் இருந்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் சம்பவ இடத்தில் அவ்வாறு யாருமே இல்லை. எங்களது பேருந்தை வலதுபுறமும், இடதுபுறமும் இருந்த சந்துக்குள் யாரோ கல் எடுத்து எறிந்தார்கள். போலிசார்

விசாரணையிலும் மேற்படி தகவலை தான் சொன்னேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்த உடனேயே எங்களது மேலதிகாரிக்கு தகவல் சொல்லிவிட்டு காவல்நிலையத்தில் புகார் கொடுத்துவிட்டோம். சம்பவம் நடந்து சுமார் கால்மணி நேரத்தில் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தோம். நாங்கள் கொடுத்த புகாரின்பேரில் தான் முதல்தகவல்அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அங்குச்சாமி என்பவர் 8.45 மணிக்கு சம்பவ இடத்திற்கு வந்துவிட்டார். அனைத்து பேருந்துகளையும் பார்வையிட்டு சேதமதிப்பிட்டு சென்றுவிட்டார். எனது புகாரிலும், நான் கொடுத்த வாக்குமூலத்திலும் எதிரிகள் யார் என்று தெரியாது, யாரோ தான் மேற்படி சம்பவத்தை செய்ததாக என்று தான் கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் சொன்னது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும், எனது மேலதிகாரிகள் சொன்னதன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

ஒப்பம்/-*****

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக் காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்.

SELVARAJAN SIVAKADATCHAM

Digitally signed by SELVARAJAN SIVAKADATCHAM
Date: 2026.02.17 10:19:06 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
மதுரை.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI.**
**S.C.No.171/2012**
**Prosecution Witness P.W. 15**

.....

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. K.வைரமுத்து | Calling | : நடத்துனர், ஓய்வு |
| Father's name | : திரு.S.குமரவேல் | Religion | : இந்து |
| Village | : வடுகப்பட்டி | Age | : 70 |
| Taluk | : பெரியகுளம், தேனி | | |

நாள் **- 13.02.2026**

**(1, 6 எதிரிகள் ஆஜரில்லை, மனு தாக்கல் செய்யப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது. 2, 3, 4, 7 எதிரிகள் ஆஜர்).**

**முதல் விசாரணை:**

நான் தற்போது பெரியகுளம் வடுகப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் நடத்துனராக பணியாற்றி ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 14.07.2010 ம் தேதியன்று நான் மதுரை திருமங்கலத்தில் இருந்து செக்காணூரணி வழியாக மதுரைக்கு வரும் TN 323 என்ற பேருந்தில் நான் நடத்துனராக பணியாற்றிய போது, காலை சுமார் 9.30 மணியளவில் செக்காணூரணியில் இருந்து மதுரை நோக்கி வரும் போது வடிவேல் தியேட்டர் அருகில் எங்கள் வண்டியில் சத்தம் கேட்டது. நானும், டிரைவரும் இறங்கி பார்த்தோம். எங்களது வண்டியின் பின்புறத்தில் கண்ணாடிகள் உடைக்கப்பட்டிருந்தது. பயணிகளுக்கு சேதம் எதுவும் இல்லை. அதே சம்பவத்தில் வேறு நிறைய பேருந்துகளும் சேதம் அடைந்திருந்தது. அங்குச்சாமி என்பவர் செக்காணூரணி காவல்நிலையத்தில் இதுகுறித்து புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள். அந்த நபர்கள் யார் என்று என்னால் அடையாளம் கூற இயலாது.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

சம்பவம் நடந்த போது திருமங்கலத்தில் இருந்து செக்காணூரணி வழியாக மதுரை வந்து கொண்டிருந்தோம். திருமங்கலத்தில் இருந்து சுமார் 8.45 மணியளவில் கிளம்பினோம். பொதுவாக ஒரு பேருந்துநிலையத்தில் இருந்து கிளம்பும்போது பதிவேட்டில் எங்கிருந்து எங்கு செல்கிறோம் என்றும், எவ்வளவு

டீசல் இருந்தது, என்றும், எத்தனை கிலோமீட்டர் சென்றோம் என்றும் எழுதிவிட்டு தான் வருவோம் என்றால் சரிதான். இந்த சம்பவம் பற்றி போலிசார் விசாரிக்கும் போது, இருப்புபதிவேட்டையும் விசாரணைக்காக கொடுத்தேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்த போது, மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி எனது பேருந்து வந்து கொண்டிருந்தது. அப்போது பேருந்தில் சுமார் 50 நபர்கள் இருந்தார்கள். கண்ணாடி உடைந்த சத்தம் கேட்ட பிறகு தான் நான் பேருந்தை நிப்பாட்டினேன் என்றால் சரிதான், அது வரை நான் பேருந்தை நிறுத்தவில்லை. எந்த திசையில் இருந்து யார் எறிந்தார்கள் என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். போலிசார் விசாரணையிலும், வாக்குமூலத்திலும் யார் எறிந்தார்கள் என்று தெரியாது என்றும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்த உடனேயே நான் தான் புகார் கொடுததேனா என்றாலும, பயணிகள் அனைவரிடமும் காவல்துறையினர் விசாரித்து அவர்கள் சாட்சி கையொப்பம் இட்டார்களா என்றாலும எனக்கு ஞாபகமில்லை. பேருநதில் இருந்த பயணிகளை போலிசார் விசாரித்தார்களா என்றால் எனக்கு ஞாபகமில்லை. எத்தனை நபர்கள் கல் எறிந்தார்கள், எப்படி சம்பவம் நடந்தது என்ற விபரம் எனக்குதெரியாது என்றால் சரிதான். நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றாலும், மேலதிகாரி சொன்னதற்கு இணங்கு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

ஒப்பம்/-*****

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு
அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு,
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால்
வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக்
காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு
சாட்சி கையெழுத்திட்டார்.

SELVARAJAN SIVAKADATCHAM

Digitally signed by SELVARAJAN SIVAKADATCHAM
Date: 2026.02.17 10:19:13 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
மதுரை.